என்றால், எடுத்துக்காட்டாக, ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியை வைத்துக் கொள்ளுங்கள், அது பெண்களுக்கு என்று ஒதுக்கப்பட்டால் திரு. தாமரைக்கனி போட்டிபோட்டு வரவே முடியாது. இல்லாவிட்டால், பொதுவாக இருந்தால், அவரும் போட்டி போட்டு பெண்கள் வராத அளவில் செய்தாலும் செய்துவிடுவார் என்பதற்காகத்தான் இந்த இடஒதுக்கீடு வேண்டும் என்று கேட்கிறார்கள். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 22, திரு. சி. குழந்தைவேலு, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

22—

இலுப்பூரை தாலுகாவாக மாற்றுதல்

***30170*—திரு. சி. குழந்தைவேலு:**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, இலுப்பூரை தாலுகாவாக மாற்றும் அரசின் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதைய நிலையில் அவசியம் இல்லை எனக் கருதி நிராகரிக்கப்பட்டுள்ளது.

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய குளத்தூர் தொகுதி கிட்டத்தட்ட 1150 கிராமங்களையும், 130 பஞ்சாயத்துக்களையும் கொண்ட பெரிய தொகுதியாகும். கீரனூரைத் தலைநகராகக் கொண்டு தாலுக்கா அலுவலகம் செயல்பட்டு வருகிறது. தாலுக்கா அலுவலகம் சென்றுவர கிட்டத்தட்ட 40 கிலோ மீட்டர் தூரம், இரண்டு, மூன்று பஸ்களிலும் மாறி சென்று வரவேண்டிய சூழ்நிலை உள்ளது. மாண்புமிகு முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இலுப்பூருக்கு வந்தபோது, அவரிடம் மக்கள் கோரிக்கை வைத்தபோது உடனடியாக அதை நிறைவேற்றி வைப்பதற்கான வாக்குறுதி கொடுத்து, அதன் காரணமாகக் கோப்புகளும் அனுப்பி வைக்கப்பட்டன. மாண்புமிகு இதயதெய்வம் அவர்கள் ஆட்சியில் இப்பகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கையாக இலுப்பூரைத் தாலுக்காவாக ஆக்கும் திட்டம் இந்த ஆண்டு செயல்படுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

1995 நவம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியில் இலுப்பூர் எனத் திருத்திக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் மிகச்சிறிய மாவட்டம். இதிலே ஐந்து சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. ஆனால், இன்றைக்கு தமிழ்நாட்டில் 234 சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. அப்படி 234 சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றபோது - தமிழ்நாட்டைப் பற்றி மொத்தமாகப் பார்க்கிறபோது 178 வருவாய் வட்டங்கள் இருக்கின்றன. புதுக்கோட்டையில் 5 சட்டமன்றத் தொகுதிகள் இருக்கிற நிலையில் 7 வருவாய் வட்டங்கள் இருக்கின்றன. இப்போதே அதிகமாக, அதாவது தேவைக்கு அதிகமாக இருக்கிறது. அவ்வாறு வந்ததற்குக் காரணம் கந்தர்வகோட்டைப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால் அதை ஒரு வட்டமாகவும், அறந்தாங்கிக்குப் பக்கத்திலே இருக்கிற ஆவுடையார்கோயில் பகுதி பின்தங்கிய பகுதியாக இருப்பதால் அதை ஒரு வட்டமாகவும் முதலிலேயே ஆக்கி இருக்கிறோம். இப்படி 7 வட்டங்கள் இருக்கின்றன. எனவே புதிதாக வட்டங்கள் அங்கே உருவாக்குவதற்கு வேண்டிய நிலைமை இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி இலுப்பூர் என்பது குளத்தூர் வட்டத்தில் இருக்கிறது. குளத்தூருக்கும், இலுப்பூருக்கும் 25 கிலோ மீட்டர்தான் இருக்கிறது. அங்கே அப்படி ஒரே வகையான பேருந்துகள் போகவில்லை என்றால் அவை அவ்வாறு அங்கே போவதற்கு வேண்டிய வாய்ப்புகள் இருந்தால் அதைச் செய்வது குறித்து உரிய அமைச்சரிடம் கேட்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் *10-15*

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கந்தர்வகோட்டை மட்டும்தான் தாலுக்காவாக தற்சமயம் ஆக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் என்னுடைய குளத்தூர் தொகுதியில் உள்ள ஒன்றியங்கள் நீண்ட தூரத்தில் இருப்பதால் அந்தந்த வட்டங்களில் அந்தந்தப் பகுதிகளைச் சேர்ப்பதற்காகவாவது ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஏதாவது ஊர்கள் எல்லாம் எட்டி, எட்டி இருந்தால் அதற்கு வேண்டுமென்றால் ஆய்வு செய்து எந்தந்தத்

தாலுக்காக்களில் அவற்றைச் சேர்த்தால் போக்குவரத்துக்கு வசதியாக இருக்கும் என்பதை அரசு பரிசீலிக்கும்.. அப்படிப் பரிசீலிக்கிறபோது சிலபேர் எந்தெந்த ஊர்களுக்குப் போய்க்கொண்டிருந்தார்களோ அதே ஊர்களுக்குப் போகவேண்டும் என்றுதான் சொல்கிறார்கள் தூரம் அதிகமாக இருந்தாலும். அதற்கு மாறுபட்டிருந்தால் வேண்டாம் என்கிறார்கள். எனவே அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 23, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

23—

பேர்ணாம்பட் வட்டம் துவக்குதல்

* **407101** *டாக்டர் ஜெ. பரந்தாமன்:* மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், குடியாத்தம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து பேர்ணாம்பட் வட்டம் புதியதாகத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இன்றைக்கு புதிதாக அங்கே ஒரு வட்டம் துவக்க வேண்டும் என்ற குறிப்பு அரசிடம் தற்போது இல்லை.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் வட்டம் மிகப் பெரியது. சுமார் 75 கிலோ மீட்டர் நீளத்திற்குப் பரந்திருக்கிறது. குடியாத்தத்திற்கு எங்கிருந்து வரவேண்டும் என்றாலும் 35 கிலோ மீட்டர் சுற்றிக்கொண்டுதான் வர வேண்டும். அது ஆந்திர மாநில எல்லைப் பகுதியாகவும் இருக்கிறது. அதன் பரப்பளவு சுமார் 1098 சதுர மைல். 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை அங்கே உள்ளது. 161 வருவாய்க் கிராமங்கள் இருக்கின்றன. ஆயிரம் சிறு கிராமங்கள் இருக்கின்றன. 105 கிராம நிர்வாக அலுவலர்கள், 270 கிராம உதவியாளர்கள் இருக்கிறார்கள். 9 பிர்க்கா, 4 ஒன்றியம், 6 பேரூராட்சி, ஒரு நகராட்சி ஆகியவை இருக்கின்றன. இப்படி மிகப் பெரிய அளவில் அது இருக்கிறது.